## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No.194/2004

Deposition of **P.W.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 17.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : செங்கோடன் Father's Name : ராமசாமி கவுண்டர்

துவக்க நேரம்: 03.32 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1) தாவா சொத்து குறித்து அனைத்து விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவாவில் 1-ம் அயிட்ட சொத்தில் உள்ள நான்கு கிணற்றிலிருந்து 3 மின் இணைப்புகள் மூலம் தாவா 2-ம் அயிட்ட சொத்திற்கு தண்ணீர் கொண்டு செல்வதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். அதில் எனக்கு பாத்தியப்பட்டது ஒரு கிணறும் அதில் உள்ள மின் இணைப்பு எண். 45 மட்டும்தான் என்றால் சரிதான். மீதமுள்ள 3 கிணறுகளும் 4-ம் பிரதிவாதி நடேசன் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, எனது தாத்தா நடேசனின் தந்தையான கையலப்ப கவுண்டருக்கு எழுதிவைத்தார் அதன் பின்னிட்டு யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி நான்கு கிணறுகளில் 4-ம் பிரதிவாதியும், அவரது குடும்பத்தினரும் செய்துகொண்ட பாகப்பிரிவினைப்படி 3 கிணறுகள் மற்றும் 2 மின் இணைப்புகள் 4-ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) மின் இணைப்புகளும் 168, 195 ஆகிய இரண்டும் எனது பெயரிலோ அல்லது எனது சகோதரர் பெயரிலோ இல்லை என்றால் சரிதான். அதேபோல் 3 கிணறுகளும், எனது பெயரிலோ, எனது சகோதரர் பெயரிலோ இல்லை என்றால் எங்களது

தாயார் பெயரில் உள்ளது. எனது தாயார் பெயரிலுள்ள மின் இணைப்பு எண்.45 என்றாலும் அந்த பாகம் எங்கள் குடும்பத்துக்கு ஒதுக்கப்பட்டது என்றாலும் சரிதான். மேற்படி 3 கிணறுகள் மற்றும் 2 மின் இணைப்புகள் எங்களது அனுபவத்தில் இருப்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3) 4-ம் பிரதிவாதி நடேசன் பெயரிலுள்ள 3 கிணறுகள், 2 மின் இணைப்புகள் குறித்து எங்களுக்கு உரிமையுள்ளதாக விளம்புகை பரிகாரம் எதுவும் வழக்கில் கோரப்படவில்லை என்றால் சரிதான். எங்களது தாத்தா பாகம் பிரித்துக்கொடுக்காததால் அதுகுறித்து பரிகாரம் எதுவும் கேட்கவில்லை. 4-ம் பிரதிவாதி நடேசன் பெயரிலுள்ள 3 கிணறுகள், 2 மின் இணைப்புகள் 168, 195 ஆகியவைகள் குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4) தாவாவில் சொத்து விவரத்தில் புறம்போக்கு நிலத்தை தாவா 1-ம் அயிட்ட சொத்தில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான். புறம்போக்கு நிலம் சம்மந்தமாக தாவாவில் எந்த பரிகாரமும் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல, அதில் பாதி பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் மேற்படி புறம்போக்கு நிலத்திற்கு உரிமை கோரி பரிகாரமும் கேட்க இயலாது என்றாலும் சரியல்ல. மேற்படி புறம்போக்கு நிலமான ஏக்.1.84 செண்ட் எங்கள் அனுபவத்தில் உள்ளது என்பதற்கான எந்தவிதமான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் மேற்படி நிலம் எங்கள் பெரியப்பா அனுபவத்தில் இருந்தது, அவர்கள் எங்களை அனுபவம் செய்யப்படவில்லை.தற்பொழுது மேற்படி புறம்போக்கு நிலம் 4-ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நாங்களும் அனுபவம் செய்து வருகிறோம். அவ்வாறு அனுபவம் செய்து வருவதற்கான வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

5) தாவா 2-ம் அயிட்ட சொத்தில் உள்ள 2 ஏக்கரில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கர் நிலமானது எனது பெயரிலோ, எனது தந்தை பெயரிலோ, எனது தாத்தா பெயரிலோ, எனது சகோதரர்கள் பெயரிலோ இருந்ததற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் மேற்படி நிலத்தை எனது பெரியப்பா பெயரில் எழுதிக்கொண்டதால் எங்களது பெயரில் ஆவணம் எதுவும் இல்லை. மேற்படி நிலமானது எங்களது கூட்டு அனுபவத்தில் இருந்து வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை, எனது அண்ணன் தாக்கல் செய்திருப்பார். மேறப்டி நிலத்தை எனது பெரியப்பா பெயரில் எழுதிக்கொண்ட விவரம் எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 வருடங்களுக்கு முன்பு தெரியவந்தது. மேற்படி ஆவணத்தை செல்லாது என விளம்புகை கோரி எந்த பரிகாரமும் இதுநாள்வரை கேட்கப்படவில்லை என்றால் சரிதான்.

6) ச.எண்.195-லுள்ள மொத்த விஸ்தீரணம் ஏக்.7.60 செண்ட் என்றால் சரிதான். ஏக்.7.60 செண்ட் என்பது கடந்த 16.02.1950-ம் ஆணடு எனது தாத்தா, எனது அப்பா, எனது பெரியப்பா ஆகியோர்கள் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினைப்படி எனது தாத்தாவிற்கு ஏக்.2 விவசாய நிலமும், கிணற்றில் பாதி பாகமும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது பெரியப்பாவிற்கு 3 ஏக்கர் விவசாய நிலமும், ஒரு கிணறும் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை ராமசாமி கவுண்டருக்கு ஏக்.2.60 செண்ட் நிலமும், அரை பாக கிணறும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை அடிப்படையில் அவரவர் பாகத்தை அவரவர் சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் அவரவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு பட்டா வழங்கியபோது

2 ஏக்கருக்கு பதிலாக ஏக்.2.10 செண்டிற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அவ்வாறு தவறுதலாக பட்டா வழங்கியதை ரத்து செய்ய இதுநாள்வரை எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணன் தான் பார்த்துக்கொண்டார். மேற்படி எனது தாத்தா பெயருக்கு பட்டா வழங்கப்பட்ட ஏக்.2.10 செண்ட் நிலத்தை 03.03.1962 எனது தாத்தா, எனது பெரியப்பா பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கிரையம் பெற்ற பின்னர் எனது பெரியப்பா கையலப்ப கவுண்டர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

7) அவ்வாறு பட்டா மாற்றம் செய்து, அனுபவம் செய்து வரும் மேற்படி ஏக்.2.10 செண்ட் நிலத்தில் 2 ஏக்கர் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிக்கப்பட்ட பின்னர் எனது பெரியப்பா அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தில் 2 கிணறுகள் வெட்டினார் என்றால் எனக்கு நினைவு தெரிந்ததிலிருந்து அந்த கிணறுகள் உள்ளது அதை யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி அந்த கிணறுகளுக்க எனது பெரியப்பாதான் மின் இணைப்பு பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை எப்பொழுது காலமானார் என்றால் எனக்கு 3 வயது இருந்தபொழுது காலமானார். இந்த வழக்கு தாக்கல் செய்தபொழுது எனது தாயார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை எனது பெரியப்பா கிரையம் பெற்ற விவரம் எனது தாய், தந்தைக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாய், தந்தை உயிருடன் இருக்கும் வரை கடந்த 03.03.1962-ம் ஆண்டு எனது பெரியப்பா பெயரில ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணத்தை ரத்து செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) கடந்த 03.03.1962 ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணம் எனது பெரியப்பா பொய்யாக ஏற்படுத்தியது என்றும், அந்த கிரைய ஆவணம் செல்லாது என்றும் கூறும் விவரங்களை எனது வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. கடந்த 10.06.1982-ல் எனது தாயார், என்னையும், எனது சகோதரர்களையும் மைனராக காண்பித்து எனது பெரியப்பா கையலப்ப கவுண்டரிடமிருந்து எனது தாத்தா பெரியப்பாவிற்கு விற்ற அரை பாகம் கிணறு உட்பட ஏக்.0.28 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி அரை பாக கிணறு மற்றும் ஏக்.0.28 செண்ட் நிலத்திற்கு 1, 3, 4 பிரதிவாதிகள் உரிமையாளர்கள் என்பதால்தான் எங்களது தாயார் அவர்களிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்படி அரை பாக கிணற்றினை எங்களது தாயார் 1, 3, 4 பிரதிவாதிகளிடம் கிரையம் வாங்கியபோதே மேற்படி பிரதிவாதிகள் எனது தாத்தாவிடமிருந்து ஏக்.2.10 செண்ட் நிலத்தை கிரையம் வாங்கியிருந்த விவரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல, எனது தாயாருக்கு தெரியாது.

9) கடந்த 10.06.1982-ல் எனது தாயார் கிணறு பாகத்தை கிரையம் பெற்ற பத்திரத்தில் கிணறு பாகமானது கையலப்ப கவுண்டருக்கு சுயராஜ்ஜீயமாக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு மேற்படி சொத்து தாத்தாவிற்கு சொந்தமானது. எனது பெரியப்பா கையலப்ப கவுண்டர் எனது தாத்தவிடம் ஏக்.2.10 செண்ட் நிலத்தை கிரையம் பெற்ற விவரம் எனது தாயாருக்கு 1982-ம் ஆண்டிலேயே தெரியும் என்றாலும் மேற்படி விவரத்தை ஒப்புக்கொண்டால் எங்களது வழக்கு விரோதமாக அமையும் என்றால் தற்பொழுது தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 1982-ம் ஆண்டிலேயே மேற்படி சொத்திற்கு 1, 3, 4 பிரதிவாதிகள் உரிமையாளர்கள் என்று அவர்களிடமிருந்து கிரையம் பெற்ற பின்னர் தற்பொழுது அவர்களுக்கு உரிமை இல்லை என்று கூறி அந்த

சொத்தில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல, எனது அம்மா விவரம் தெரியாமல் அவ்வாறு கிரையம் வாங்கியுள்ளார்.

10) கடந்த 1982-ல் ச.எண்.191/1A -ல் உள்ள நிலத்தில் கிணறு பாகம் உட்பட ஏக்.0.28 செண்ட் கிரையம் பெற்றிருந்தபோதிலும் எனது தாயார் பெயருக்கு ஏக்.0.06 செண்ட் நிலத்திற்கு மட்டுமே ச.எண்.191/1A1 என உட்பிரிவி செய்யப்பட்ட பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனது தாயார் ஏக்.28 செண்ட் நிலமும் கிரையம் வாங்கினார், பட்டா தவறாக வழங்கப்பட்டுள்ளது. ச.எண்.191/1A- உள்ள மீதமுள்ள ஏக்.2.04 செண்ட் நிலம் ச.எண். 191/1A2 என உட்பிரிவு செய்யப்பட்டு 1,3,4 பிரதிவாதிகள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அது தவறாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பட்டா தவறுதலாக வழங்கியதற்கு இதுநாள்வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் எனது அண்ணன் நடவடிக்கை எடுத்திருப்பார். எனது குடும்பத்தினர் சார்பாக தற்பொழுதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4, 5 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 04.35 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Additional District Munsif, Attur

Typed by Selvi. C. Sasikala - O.S. No.194/2004 , Dt.17.10.2025.